
ரூ. 5.00

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

தமிழ் ஆண்டு 2039
ஆடி - ஜூலை 2008



பெருந்தலைவர் காமராசரின் 106ஆவது பிறந்தநாளைப் போற்றுவோம்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ. 5-00
ஆண்டுச் சந்தா	ரூ. 60-00
ஆயுட் சந்தா	ரூ. 600-00
புரவலர் கட்டணம்	ரூ. 1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

91

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்ஆண்டு 2039 மாதம் : ஆடி

மலர் : 23 இதழ் : 7

45718

கல்வி வளர்ச்சி நாள்

இன்று தமிழகம் முழுவதும் பள்ளிகளில் கல்வி வளர்ச்சி நாள் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏழை எளிய அடித்தளத்து மக்களுக்குக் கல்வி வெளிச்சம் மறுக்கப்பட்டபொழுது, அறியாமை இருளை விரட்ட எந்த ஆதவன் மண்ணில் தோன்றுவான் என்று தவம் கிடந்தபொழுது, காலத்தின் "கருணையால் நமக்குக் கிடைத்த மனிதப் புனிதர்தான் கர்மவீரர் காமராசர்!

ஏழைகளின் குடிசைகளுக்குக் கல்வி வெளிச்சத்தை எட்டிப் பார்க்க வைத்த காலைக் கதிரவன்!

ஊமைச் சனங்களின் தாய்மொழி!

புரட்டுக்காரர்களுக்கு நகக் கண் ஊசி!

பெருந்தலைவர் காமராசர் என்ற பெயருக்காகப் பிறந்தவர்!

முதல் அமைச்சராய் இருக்கின்ற காமராசர் சாலை ஓரத்தில் மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்களோடு சின்னஞ்சிறு உரையாடுகின்றார்!

மாடு மேய்க்கும் சிறுவனிடம் முதல் அமைச்சர் காமராசர் கேட்கின்றார் "பள்ளிக்கூடம் போகலியா? "பள்ளிக்கூடம் போனா வயிற்றுக்கு என்ன பண்றது?" சிறுவனின் பதில்! இது சிறுவனின் பதில் அல்ல! தமிழகத்தின் ஒட்டுமொத்த அடித்தளத்து ஏழ்மையின் குரல்!

"எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கு வரவேண்டும் என்றார்; ஒரு வேளை மதிய உணவு அளிக்க வேண்டும் என்று உடனடியாக இலவச மதிய உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தினார்! இது ஆகாத திட்டம், பெருஞ் செலவினம் என்று கேலி பேசிய பொழுது, "எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கு வரவேண்டும் என்பதற்கு ஒரு வேளை மதிய உணவு அளிக்க

வேண்டும் என்பதற்கு, நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டால் நான் தெருத்தெருவாய்ப் பிச்சை எடுக்கவும் தயார்" என்றார்! பெருந்தலைவர் காமராசர் அறிமுகப்படுத்திய இலவச மதிய உணவுத்திட்டம் ஏழைக் குழந்தைகளின் கல்விக் கண்திறக்கும் வெளிச்சமாய் ஒளிவீசியது!

இதன் தொடர்ச்சியாய்த் தான், அமரர் புரட்சித்தலைவர் முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் சத்துணவுத் திட்டமாய் மாற்றப்பட்டு இன்று முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால், முட்டைகளோடு கூடிய சத்துணவுத் திட்டமாய் வளர்ச்சி அடைந்திருப்பது சிறப்புக்குரியது!

முதலமைச்சராய் இருக்கின்ற காமராசரிடம் பெற்ற தாய் கேட்கின்றாள். மகன் முதல் அமைச்சராய் இருப்பதால் தன்னை நிறையப் பேர் பார்க்க வருகின்றார்கள்! வருகின்றவர்களை உபசரித்து அனுப்ப, மாதம் தோறும் காமராசர் தனக்கு அனுப்பும் 30 ரூபாய் பணம் போதவில்லை! அதனால் கொஞ்சம் பணம் சேர்த்து அனுப்புமாறு காமராசரின் தாயார் கேட்கின்றார்! முதல் அமைச்சராய் இருப்பவர் கூறுகின்றார்! "வருகின்றவர்களை சும்மா பார்த்து அனுப்பு! நான் அனுப்பும் 30 ரூபாய்க்குள் சிக்கனமாக வாழ்க்கை நடத்து" என்கின்றார்! வீட்டில் ஒரு கழிப்பறை கட்டவேண்டும் என்று கேட்ட தாயிடம் முதலமைச்சராய் இருந்த மகன் சொல்கின்றார்! "நீ கழிப்பறை கட்டினால் ஊரில் இருப்பவன் நான் பங்களாக்கட்டிவிட்டேன் என்று சொல்வான்" என்று தவிர்த்துவிட்டார்!

காமராசருக்கு ஏது பங்களா? ஏழைக்குழந்தைகள் கல்விபயில அவர் கட்டிய கல்விக் கோயில்களே இன்றும் அவர் வாழும் கோயில்கள்!

"இன்று கல்வி உலகத்தில் ஒரு புறத்தில் வளர்ச்சியும் நடைபெறுகின்றது. அனைவருக்கும் கல்வி இயக்கம் என்ற தொடக்கக் கல்வித்துறையில் செயல்வழிக்கற்றல் (Activity based Learning) என்ற பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அனைவருக்கும் வழங்கப்படும் கல்வி சமவாய்ப்பு சமதகுதியை உருவாக்குகின்றதா? என்பது கேள்விக்குரியது. பொதுக்கல்வி என்றால் தரம் குறைவு என்று ஆழமாய் மக்கள் மனதில் விதைக்கப்பட்டு விட்டது! புற்றீசல் போலப் பல்கிப் பெருகும் ஆங்கில மழலையர் பள்ளிகள், ஏழை, பணக்காரர் என்ற பேதம் இன்றி, எல்லோரும், தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளில் பயில வைக்கும் ஆர்வம், இந்நாட்டின் தாய்மொழி வழிப் பொதுக்கல்வி உலகத்திற்கு விடுக்கப்பட்ட சவால்கள் ஆகும்! தாய்மொழி வழிப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்களின் கடமை உணர்வுக்கு விடுக்கப்பட்ட அறைகூவலை

அர்ப்பணிப்பு உணர்வுடன் எதிர்கொள்ளவேண்டியது ஆசிரியப் பெருமக்களின் பெருங்கடமையாகும். அரசுப்பள்ளிகளிலும், நிதி உதவிபெறும் பள்ளிகளிலும், பயிலும் மாணவச் செல்வங்களை கல்வி உலகத்தின் எல்லாத் தளங்களிலும், போட்டிகளிலும் வெற்றிபெறும் தகுதி உடையவர்களாக உருவாக்குவது ஆசிரியர்களின் அரும்பெரும் கடமையாகும்! அரசு, பொதுக் கல்வித்துறையின் தரத்தை மேம்படுத்த எல்லா வழிவகைகளையும் காணவேண்டும்! குறிப்பாக, செயல்வழிக் கற்றலை அறிமுகப்படுத்துகிற தொடக்கக்கல்வி உலகத்தில் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதாச்சார விதி தளர்த்தப்படவேண்டும்! நமது குன்றக்குடித் தொடக்கப்பள்ளியில் களஆய்வு செய்த குன்றக்குடி மகளிர் கல்வியியல் கல்லூரி மாணவிகள் படிப்புத்திறனில் பின்தங்கிய 100 மாணவர்கள் ஒரு ஆசிரியருக்கு ஒரு மாணவர் (Each one; Catch one; Teach one) என்று ஒரு நாள் முழுவதும் பரிசோதித்துப் பார்த்ததில் வகுப்பறையுள் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்ததால், பின் வரிசையில் இருக்கின்ற மாணவன் கற்பதில் பின்தங்கிவிடுகின்றான். ஆசிரியர் – மாணவர் உறவில் அச்சம் அகன்று நெருக்கமான அரவணைப்பும், கண்காணிப்பும் அவசியம் ஆனதால் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற கட்டாய விதி தளர்த்தப்பட வேண்டியதாக உள்ளது. மேலும், நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக, உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாகத் தகுதி உயர்த்தப்பட வேண்டிய தாய்மொழி வழி தனியார் நிதி உதவிபெறும் பள்ளிகள், சுயநிதியில் தான் இயங்கவேண்டும் என்ற ஆணை திரும்பப் பெறப்பட்டு தகுதி உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கும் உயர்த்த வேண்டிய பள்ளிகளுக்கும் அரசு நிதி உதவி அளித்திட ஆவன செய்யவேண்டும்.

பொன்னில்லான்
பொருளில்லான்
புகழ்அன்றிப் பகை இல்லான்
இல்லாளும் இல்லான்,
இல்லை என்றும் ஏக்கம் இல்லான்
அரசியலைக் காதலுக்கே அர்ப்பணித்தவர் மத்தியிலே
காதலையே அரசியற்குக் கரைத்துவிட்ட கங்கை அவன்!

என்று கவியரசர் போற்றும் காமராசரின் பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாளாய்க் கொண்டாடும் இனிய வேளையில், சத்துணவோடு வழங்கப்படும் கல்வியைச் சத்தானதாக ஆக்க நாளும், நாளும் பாடுபடுவோம்!

பொன்னம்பல அடிகளார்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

89. உட்பகை

உட்பகையாவது, புறத்தே வெளிப்படாமல் அகத்தே நின்று உடற்றும் பகை. மற்றும் நம்முடைய பகைவராயிருந்தவர் பின் உடன்பாடு ஏற்பட்டுப் பழகும்பொழுதும் பழைய பகையை மறந்துவிடாமல் கரவாக உட்பகையைப் பேணுதலுமாகும். இது அறமன்று.

நம்முடைய பகைவர்கள் நாம் பெருந்தன்மையுடன் பகையை மறந்து உறவு கொண்டு பழகும்பொழுதும் பகையை மறந்துவிடாமல் உட்பகையைப் பேணி வைத்திருத்தலுமாகும்.

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவ:்ம் இன்னா செயின். (881)

இன்பமளிக்கும் நிழலும் நீரும் பின் விளைவாகத் துன்பம் தரும். அதுபோலத் தொடக்கத்தில் இனியவராகத் தழுவும் நண்பர்களும், உறவினர்களும் பின் துன்பம் விளைவிக்கலாம்.

நிழலும் நீரும் குளிர்ந்தே கேடு செய்தல் போல் முகம் பேசியும் புகழ்ந்து பேசியுமே கெடுப்பர் உட்பகை உடையவர்.

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (882)

வாள்போல் தோன்றும் பகைவரைக் கண்டு அஞ்ச வேண்டாம். உற்றார் போல் வாழும் பகைவர் தொடர்புக்கு அஞ்சுக.

"வாள்போல் பகைவர்" - வெளிப்படையாகத் தோற்றமளிக்கும் பகைவராதலால் இயல்பாகவே உள்ள தற்காப்புணர்வு மிக்குத் தோன்றிப் பாதுகாப்புத் தரும். உற்றார்போலக் காட்டிக் கேடு செய்யும் பகைவரின் நயப்புடைய சொல், செயல்களால் மயங்குதல் ஏற்படுமாதலால் இயல்பாக

உள்ள தற்காப்புணர்வும் செயற்படாது போய்த் துன்பம் மிகுதியாகும் என்பதால் "கேள் போல் பகைவர் தொடர்"பை விலக்கும்படிக் கூறினார்.

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவுஇடத்து
மட்பகையின் மாணத் தெறும். (883)

உட்பகையுடையாரை அஞ்சித் தற்காத்துக் கொள்க. அங்ஙனம் காத்துக் கொள்ளத் தவறின் நிலைகுலையும். தருணம் வந்துற்றபொழுது மண்பானை அறுக்கும் கத்தி போல் தீமை செய்வர்.

"மட்பகையின் மாணத் தெறும்" என்றது பச்சை மண்ணை எளிதில் குயவன் கத்தி அறுக்குமாறு போல் எளிதில் துன்பம் செய்வர் என்றது.

மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும். (884)

ஒருவருக்கு மனம் அடங்காத உட்பகை தோன்றின் இனம் அடங்காத நிலையில் துன்பங்கள் பலவும் தரும்.

"இனம் அடங்காத" சார்ந்தோர் இனம் தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு ஒழுகாமையினால் ஏற்படும் துன்பங்களைக் குறித்தவாறு.

"இனம்" இதனை, "ஈனம்" என்று பாடம் மாற்றிப் பொருள் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். (885)

உறவுமுறையில் வாழ்ந்து உட்பகை தோன்றின் அந்த உட்பகை இறத்தல் முதலாய துன்பங்களைத் தரும்.

உறவு கொண்டு பழகியோரிடம் உட்பகை வந்திடின் மரணம் முதலிய துன்பம் வருதல் எளிது.

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. (886)

உளம் ஒன்றிப் பொருந்திப் பழகாமல் உட்பகை கொள்வோர் உறவு பெற்றுவிட்டால் சாகாமல் சாதல் அரிது.

"சாகாமல் சாதல்" ஆவது; செத்துப் போகாமல் நாளும் செத்துக் கொண்டே இருத்தல் என்பது கருத்து.

உட்பகை பெற்றார் சாதல் இல்லை, சாகடிக்கப்படுவர் என்று கூறலும் பொருந்தும்.

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. (887)

செப்பு அடியும் மூடியும் பொருந்தியிருப்பது போலத் தோன்றும். ஆயினும் எளிதில் பிரிந்துவிடும். அதுபோல உட்பகையுடையார் ஒன்றாதல் அரிது. செப்பின் அடிப்பாகத்தினை மூடி வைக்கப் பயன்படும் மூடி முறையாகப் பொருந்துவதில்லை. அதுபோல உட்பகை உடையார் உ.ளமாரப் பொருந்தி உறவு கொள்வதில்லை.

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. (868)

அரத்தின்வயப்பட்ட இரும்பு தேய்தல் போல உட்பகையுடையாரால் குடி தேயும்.

இரும்பில் அரம் பொருதினால் தேய்மானம் ஆகும். உட்பகையுடையார் கூட்டினால் குடி கெடும்.

எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. (889)

உட்பகை எள்ளவினதேயாயினும் அழித்தற்குரிய உள்ளீடு உள்ளது என்பதறிக.

"உட்பகை" - அளவினால் கணக்கிடப்படுவதன்று. உட்பகையின் எதிர் விளைவுகளே கணிப்பிற்குரியன.

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று. (880)

உளம் சார்ந்த உடன்பாடில்லாதவருடன் கூடி வாழ்தல் என்பது பாம்புடன் கூடி வாழ்தலை ஒத்தது.

பாம்பாயினும் பழக்கத்தால் தீமை செய்யும் இயல்பு மாறும். ஆனால் உட்பகையுடையார் மாறுவரோ என்ற ஐயம் எழும்புகிறது.

(தொடரும்)

அருளாலய இடதுசாரி

(தமிழாகரர். **தெ. முருகசாமி,** புதுச்சேரி)

இடதுசாரி என்னும் வார்த்தை
இந்நாளில் கேட்குந் தோறும்
படபடக்கும் பலரின் நெஞ்சம்
பட்டாசு வெடிப்ப தைப்போல்!
அடக்குமுறை அதிகா ரத்தை
அங்குசம்போல் கையில் ஏந்தும்
முடக்குவாதப் பேர்கள் என்ற
முணுமுணுப்பும் உண்டிங் கேதான்!

அணுசக்தி ஒப்பந் தத்தால்
அருமையான பார தந்தான்
அணுவளவும் அமெரிக் காவின்
அடிமையாய் ஆகா தென்று,
அணுஅணுவாய்ச் சொன்னா லும்மே
அனைத்திற்கும் மறுப்புக் கூறி
அணுகுண்டு வாதம் செய்வோர்
அந்தஇடது சாரி யாரே!

அதனாலே கூட்ட ணிக்கு,
அடுத்தடுத்த ஆபத் தாலே
அதம்பட்டுப் போகும் மைய
அரசியலும் கவிழும் என்றோர்
விதமான பேச்சும் இங்கே
விறுவிறுப்பாய்க் கேட்ப தாலே,
பதமாக நினைத்தேன் ஒன்றைப்
பரிமாறச் சுவைபார்ப் பீரே!

அயல்நாட்டுக் கைப்பா வைப்போல்
அடக்கிநமை ஆளு தற்கே
இயல்பான அமெரிக் காதான்
இந்தியாவின் இறையாண் மைக்கு
மயல்மருந்தைத் தருவ தாக
மதிப்புமிகு இடது சாரிப்
புயல்போலக் கூறும் வாதம்
புரியவில்லை முழுது மாக!

ஏனென்றால் இன்றோர் நாடு
இன்னொரு நாட்டைத் தானும்
தானென்ற முனைப்பைக் காட்டித்
தம்பக்கம் இழுக்கப் பார்க்கும்
நானென்ற கொள்கை தன்னை
நயமாகப் புரிந்தா லும்மே
தேனென்றால் இனிக்கா தென்ற
தெளிவினையும் பெற்றேன் நானே!

ஆனாலும் ஐயங் கொண்டேன்!
அமெரிக்கா அடக்கும் என்ற
தேனான பசப்புப் பற்றித்
தெரிவிக்கும் இடது சாரி
கோனாக இருந்து கொண்டு
கொள்கையால் கூட்ட ணிக்குக்
கூனான குந்த கத்தைக்
கொடுப்பதுவும் முரணா காதோ?

ஒப்பந்தம் அடக்கும் என்றால்
ஒருவிதமாய் இடது கொண்ட
ஒப்பந்தக் கூட்டுக் கூட
ஒருவகைநிர்ப் பந்தந் தானே!
"ஒப்பந்தம் போனால்" என்ற
உணர்த்தலுமச் சுறுத்த லன்றோ?
ஒப்பியபல் உணர்வி னோடே
உறங்கிக்கண் ணயர்ந்து விட்டேன்!

"வலதுசாரி" என்றே என்னை
வண்டமிழில் அழைத்த வாறு
பலதைநீ பகர்ந்த தெல்லாம்
பலமாக அலசிப் பார்த்தோம்!
வலதிடது என்ற வார்த்தை
வளப்பத்தை அறிந்தாய் இல்லை!
சிலதைநாம் சொல்ல லுற்றால்
சிந்திப்பாய் நமக்குள் என்றார்!

ஆண்டவன் மங்கை பங்கன்!
அப்பிரான் மலையில் உள்ளான்!
ஈண்டவன் வடிவந் தன்னில்
இடதுசாரி மங்கை யாவாள்!
மாண்டஅம் மங்கை யோடு
மன்னும்ஆண் வலது சாரி!
ஈண்டிறை பெண்ஆண் காட்சி
இருசாரி காட்சி தானே!

ஆதலால் வலது சாரி
யானநற் கணவன் கொண்ட
காதலாம் இடது சாரி
காட்சிமிகு மனைவி யோடு
மோதலிலா வகையில் நாளும்
மோதக இனிப்பாய்ச் சேர்ந்தே
சாதல்வரை ஈர்த்தும் போர்த்தும்
சாதனை படைப்பார் போல;

நாடாளும் கட்சி, தம்மின்
நல்லெதிர்க் கட்சி யோடே
வீடாளும் ஆண்பெண் போல
வித்தகமாய் ஒத்துப் போனால்
மூடாத தேன்கு டத்தில்
மொய்த்திடும் இனிப்பைப் போலக்
கோடாத கூட்ட ணிக்கே
கொற்றந்தான் நிலைக்கும் அன்றே!

என்றவரை ஏறிட் டேன்நான்,
இயம்பியதை எண்ணிப் பார்த்தேன்!
நின்றஅரு ளால யத்தின்
நிலையான உருவந் தன்னில்
ஒன்றிய வலத்திடச் சாயல்
உருவத்தைப் பார்த்த வாறாய்க்
குன்றிருந்த குமர வேளைக்
கும்பிட்டேன், எழுந்தேன் நன்றே!

முப்பாலின் முதற்குறட்பாக்களின் ஒத்திசைவு

(முனைவர். கா. அரங்கசாமி)

முன்னுரை :

திருக்குறள் உலகளாவிய அறவியல் ஆட்சியும் மாட்சியும் படைக்க வந்த மாமறை நூல். அதனை ஏனைய இலக்கியம் போலக் கருதுவது அதன் ஆளுமைத் திறன் அறியாக் குறையேயாம். அத்துடன் திருக்குறள் உலக அளவில் தனக்கெனத் தனித்த மெய்யியல் கோட்பாடுகளைக் கொண்டது. இத்தகைய உலக மெய்யியல் நூல் திருக்குறள் ஒன்றேயாம். உரையாசிரியர்களின் காலக்கோட்பட்ட பார்வையும் தத்தமது எல்லைக்குட்பட்ட பார்வையும் திருக்குறளை முழுமையாக உணரந்து அறிய முடியாமல் தடுத்தன. திருக்குறளின் தோற்றக் களத்தை ஆய்ந்தால் மட்டுமே உண்மை காணமுடியும். எனவே திருக்குறளின் அறத்தின் ஆளுமைத்திறத்தையும், ஆன்ம மாந்தவினத்தின் அறிவாற்றலின் போற்றற்குரிய மெய்யியலையும் தொலைநோக்கியாக நின்று காட்டும் முப்பாலின் முதல் அதிகாரங்களின் மூன்று குறட்பாக்களில் காணப்படும் ஒத்திசைவின்வழிச் சுருக்கமாகச் சில மெய்யியல் உண்மைகளை இங்குக் காண்போம்.

முப்பாலும் முதல் குறட்பாக்களும்

பால் என்னும் சொல்லிற்குத் தொல்காப்பிய அடித்தளத்தில் நின்று கீழ்வரும் பொருள்களைக் காணலாம். ஊழ்வினை, பகுத்து வழங்கும் ஆற்றல், பகுத்து வந்து காலத்தால் ஊட்டுவது, இயற்கைச் சட்டம், உலக இயக்க அமுதம் (உயிரியக்க அமுத ஊற்று) பாலியல் இயக்கம், ஆண் பெண் இணையம், பால்பாகுபாடு, பல்லுயிர்ப்பகுப்பு, உயிர்களின் இன்ப நாட்டம், பாலது ஆணை (சித்தாந்தம் கூறும் மாயையின் ஆட்சி) எனப் பல்வகைப் பொருளையும் அச்சொல் பகுத்துப் பகுத்து வழங்கக் காண்க. அறிவு விரிய விரிய, அகத்தவம் ஓங்க ஓங்க சொல்லின் பொருளும்

விரிந்தும் ஓங்கியும் தோன்றும். மெய்யியல் நோக்கில் சொற்கள் இயல்புப் பொருள் கடந்து ஊடுபொருளும், உள்ளுறைப் பொருளும் உணரவியலாத உள்ளாற்றல் உணர்த்தும் பொருளும் கொண்டு விளங்கக் காண்க. மெய்யியலின் அடித்தளமே "செம்பொருள் காண்பது அறிவு" என்னும் குறளடியால் விளக்கம் பெறும். எனவே செம்மையே செம்மையாகக் கொண்ட பரத்தின் உள்சென்று உயிர்களின் செம்மை காணும் அறிவும், வாழ்வியல் – மெய்மங்களும் மெய்யியல் ஆயின. இங்கு வடவர் கூறும் மாயாவாதத்தையும்; மேலை நாட்டவர் கூறும் உலகியல் மயக்கத்தையும் கன்பூசியசு கூறிய இவ்வுலகிலேயே வாழத் தெரியாதவருக்கு அவ்வுலகு ப்ற்றிப் பேசிப் பயன் என்ன? என்பதையும் புறத்தே நிறுத்திவிட்டு நமது அகப்புறத் தூய்மை காட்டும் தூய மெய்யியலின் நுட்பம் உணரப்படவேண்டும். திருக்குறளின் மெய்யியல் அடித்தளம் தமிழ் அறிவர்கள் (சித்தர்கள்) கண்டதுபோல உடலோடு சிவவுலகம் சேர்தல் போல, "வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வம்" ஆவான் என்பதன் நுட்பம் காண்க. "மற்று ஈண்டு வாரா நெறி" காட்டும் அறவழி நின்று செம்பொருள் கண்டு புலன் அறிவு கடந்து "காட்சி அறிவால்" அகக் கோயிலில் உள்ள உறுபொருளை உணரும் தவமே திருக்குறள் கூறும்; தவம் எனக் காண்க.

முப்பால் விளக்கம்

காமம் உடல் இயக்கம்; பொருள் உடல் வாழ்க்கை அறம் உயிர் ஈடேற்றம். காமம் நிறைந்து உயிர் புலன் அறிவால் உலகம் உணர்ந்து செம்மை பெறும்; பின்னர்க் காதலாகி நின்று பொருள் வாழ்வால் உயிர்களை உலக மாந்தனாக்கும்; அதன் பின்னர் அறத்தால் உயிர் பரத்துடன் இணைந்து மற்று ஈண்டு வாரா நெறி காணும். எனவே அறம் பொருள் காமம் மூன்றும் சமச்சீர் நிலையில் இயைய வாழ்வின் வான்பயன் தெய்வநிலையாம். அறத்தின் ஆட்சியில் காமம்; அறத்தின் மாட்சியில் பொருள்; இரண்டும் நிறைய அறம் தரும் இன்ப அன்பு வாழ்வின் நிறைவாம் என்னும் வள்ளுவ மெய்யியல் காண்க.

மனிதன் மூவகை ஆற்றலின் வடிவம்.விருப்பம், அறிவு, செயல்திறன் என்பன அவை என்பர். முப்பாலால் குறள்நெறி மூவகை

ஆற்றலையும் அறவழிப்படுத்தும் திறம் நோக்குக. இலக்கியங்களின் நிறைபயணம் மெய்யியல் உணர்தல் என்பர். திருவள்ளுவர் உலக மாந்தர்தம் வாழ்வியல் கோட்பாடுகளைக் கூற வந்தவர். ஆண் பெண்; மன நாடகக் காட்சியாகக் காமத்துப் பாலிலும், பின்னர் காமம் கனிந்து காதலாகிச் சிறக்கப் பொருள்வளம் போற்றச் "செய்க பொருளை" என்று வினைத்திட்பத்தைப் பொருட்பாலிலும் உணர்த்தினார். முடிவாகக் காமம் பொருளும் பிழைவழிப்படின் கயமை ஆளும் என்பதால் ஊழ்வினை என்னும் இயற்கையை உணர்த்தினார். மனிதம் ஊழ்வினையை ஊடறுத்துச் சென்று முயற்சியால் வெல்லும் வழி காட்டினார். இயற்கை கடந்த செயற்கை வாழ்வின் கேட்டினைத் தந்தார். ("செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்" என்றும்; "அறிவினான் ஆகுவதுண்டோ" "பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக்கடை" என்றும் கூறிடக் காண்க) கயமை வாழ்வினில் களித்துக் குடித்துக் குளித்து அறிவிழந்தோர் பண்பிழந்தோர் பெருக, "மண் புக்கு மண்ணாகும்" என்பதைப் "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்" என உணர்த்தக் காண்க. எனவே அறத்துப் பால் இல்லறத்தையும் இல்லறத் துறவினையும் அறவழி ஆக்கத்தையும் எடுத்துக் காட்டக் காண்க. எனவே முப்பாலும் மனித வளத்தை மேம்படுத்தித் தெய்வவுலகம் மண்ணில் படைக்க வந்த வள்ளுவத்தைக் காட்டக் காண்க.

மூன்று அதிகாரங்கள்

முப்பாலின் மூன்று முதல் அதிகாரங்களாகிய மூன்றும் ஒத்திசைந்து நின்று காட்டும் மெய்யியல் அடித்தளக் கோட்பாடுகளைக் காண்போம்.

1. கடவுள் வாழ்த்து (தமிழ் அறிவர் (சித்தர்) பார்வையில் மனிதன் கடவுள் நிலைபெறல்) 2. இறைமாட்சி 3. தகையணங்குறுத்தல் என்னும் மூன்று அதிகாரங்களும் உணர்த்துவன காண்போம்.

இம்மூன்று அதிகாரங்களிலும் மனித அறிவின் எல்லை கடந்த ஒரு பொருள் உள்ளீடாகி நின்று இயக்கக் காண்க. கடவுள், இறைமை, தகையணங்கு என்;னும் மூன்றிலும் ஓர் உள்ளொளிப் பொருள் ஒளிரக் காண்க.

கடவுள் - உள்ளம் கடந்த மூல முதற்பொருள் - ஆதிபகவன். இறைமாட்சி - உலகின் இறையாண்மை காட்டும் நிலை. தகையணங்குறுத்தல் - தனது மீமிசை ஆற்றல் தகையால் உலக நிலை நிற்பாரை வன்புறுத்தும் அணங்கு நிலை. (வருந்திய மாந்தனைத் தன் அகப்புற அழகால் ஈர்த்து உலகியல் நடக்க அமுத இன்பம் தந்து அடிமைப்படுத்தி உலகியல் மாறுபாடுகாட்டும் நிலை) இங்கு சித்தாந்தம் கூறும் சிவத்தின் மூன்று நிலைகளாகவும், "ஒன்றாய், உடனாய், வேறாய்" என்பதையும் உடன் எண்ணுக. அறத்துப் பாலில் அறத்துடன் ஒன்றாகியும், பொருட்பாலில் தன் ஆற்றலால் பொருட்களுடன் கலந்து உடனாகியும்; காமத்துப்பாலில் சிற்றின்பமாம் உடலின்பம் வேறு, உயிரின்பமாம் பேரின்பம் வேறு எனக்காட்ட வேறாகி நிற்கும். மனித மனம் காற்றாகிக் காமத்தில் கலந்து திரிய வேறாகிப் போன ஆதிபகவனை மறந்து பொருள் வாழ்வில் உடனாய் நிற்பதையும் உணராது; உழைப்பும் உறவும் கொண்டு திளைத்து மெய்யறிவு தோன்ற வேண்டாமையே விழுச்செல்வம் எனக் கண்டு அறத்தின் ஆட்சியில் அதுவே தானாகிய பாங்கால் வானுறையும் தெய்வ நிலைபெறும். எனவே முப்பாலின் நுட்பம் அனைத்துயிரும் காமம் கனிந்து காதலாகித் தமிழ்ச் சித்தர்கள் தம்முள் இறைமை காணுவது போலச் சிவயோகத்தால், சிவ போகம் பெற்றுச் சீவ போகம் துறந்து நீடுவாழும் பேறுபெறல் என்பதே. இதுவே திருக்குறளின் மெய்யியல் அடித்தளம் ஆகும்.

இனிக் கடவுள் வாழ்த்தினைக் காண்போம் (தமிழ் அறிவர்கள் புறக்கோயிலையும் புறவழிபாட்டையும் புறந்தள்ளியவர்கள் என்பதை நினைவில் நிறுத்துக)

1. அகரம் அனைத்துக்கும் முதல் (மூலம், அடித்தளம், முதலீடு, முதன்மை, முதலிடம், முதற்காலம் இன்னும் பல முதலாம் தன்மைகள்) அவ்வண்ணமே ஆதிபகவன்.
2. கல்விப்பயன் - வாலறிவன் நற்றாள் வழி மெய்யறிவால் படர்தல்.
3. அருளாம் அடி சேர உயிர்கள் நிலமிசை நீடுவாழும்.
4. வேண்டுதல் வேண்டாமை அறஅடிசேரும் உயிர்கட்கு யாண்டும் இடும்பை இல (தான் தனது அறத்துயர்இல)
5. இருவினைத் துன்ப உலகியல் நீங்க இறைவனின் பொருள்சேர் புகழ் புரிக (அறவியல் வழி வாழ்க)

6. பொறிபுலன் ஆண்டு அவிக்க – ஒழுக்க நெறி நிற்க நீடுவாழ்வார்.
7. தனக்கு உவமை அற்ற மூலமுதலை முற்றாக அறிய மனக்கவலை மாறும். (அதுவாகிய போது பேரின்பம் தோற்றும்)
8. அறத்தினை ஆளும் "அம்" தண்மை மிக்கவன் அருள்சேரப் பிறவித்துன்ப்க் கடல் நீந்தலாம்.
9. எண்குணம் (எண்;ணவியலாக் குணம் – குணம் பிறவி நோய் மருந்து) ஏற்ற தலை (அறிவு மண்டலத்தில் மெய்ப்பொருள் ஒளி காணல்) அதுவே வணங்கும் தலை.
10. இறையருள் வழி நிற்கப் பிறவிப் பெருங்கடல் நீந்தலாம். உலகியல் இன்ப உடல் எடுத்தவை உயிர்கள். அவை உணர்வு எல்லைக்குட்பட்டவை. உணர்வும் அறிவும் கடந்து மெய்யறிவு உணர்த்துவதே கடவுள் வழிபாடு. இங்கு உயிர்களின் மாசு போக்கும் அருட்படையின் ஆட்சி காட்டுகிறார். பின்னர் பொருட்பாலில் படையெனத் தொடங்கக் காண்க. பொருள் வந்தால் படை வரும். போட்டிப் போர் வரும். மண்ணின் இறையாண்மை காக்கும் மாட்சிக்குரிய வேந்து அமைதல் வேண்டும். அதனையும் காண்போம்.

1. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் அமையின் அரசு தலைமை ஏற்கும்.
2. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் நிலமாள வேண்டும்.
3. தூங்காமை, கல்வி, துணிவுடைமை, நிலம் செழிக்க வேண்டும்.
4. அரசு அறன்வழி நிற்க மறத்திலும் அறம் மானம் காக்க.
5. இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் நான்கும் பொருளின் வலிமை.
6. காட்சி எளிமை, கடுஞ்சொல் இன்மை ஆள்வோர் சிறக்க வரும் பண்பு.
7. இனிய சொல், ஈகை, அளி, வல்லமை உலகம் கண்டு மகிழும்.
8. முறை செய்தல், காத்தல் இறைமைப் பண்பு.
9. செவிகைப்பச் சொற்பொறுத்தல் இறைமையின் சீர்.
10. கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் அரசுக்கு ஒளிதரும்.

இவ்வதிகாரத்தின் பல குறட்பாக்கள் அறத்துக்கும், செயல் திறனுக்கும், காத்தலுக்கும் முதலிடம் தரக் காண்க. இனி காமத்துப் பாலின் தகையணங்குறுத்தல் அதிகாரத்தைக் காண்போம். தகை என்பதே எல்லையற்ற தகுதிகொண்ட இறைமை காட்டும். அணங்குறுத்தல்

என்பதும் ஏறத்தாழ அப்பொருள் கொண்டதே. உறுத்தல் மாயை வழிப்பட்ட காமக்கோள். தண்டிக்கப்படும் என்பதை உணர்த்தக் காண்க. (இங்குக் காம ஆற்றலே அறிவாற்றலுக்கு அடித்தளம் என்னும் சித்தர் நெறி காண்க. திருமந்திரம் மூல ஆற்றலை மூளை ஆற்றலுடன் இணைப்பதே சக்திசிவம் இணைப்பு எனக் கூறக் காண்க. அதாவது மூலாதார ஆற்றலை (காம ஆற்றலை) ஞான நாடி வழி மேலேற்றிக் கொண்டுவந்து சகசரதளம் என்னும் மூளை ஆற்றலுடன் இணைப்பதே சிவயோகம் சிவபோகம் என உணர்த்தக் காண்க) மற்றும் காமம் கண்ணிய வழிபாட்டினை, நாயக நாயகி பாவ வழிபாட்டினையும் சேர்த்து நோக்குக) இனித் தகயணங்குறுத்தலைக் காண்போம்.

1. மாயையால் மயக்கும் நெஞ்சம், நிலைநில்லா நெஞ்சம் எமக்கு எப்படி வந்தது. கண்முன் காணும் உருவம் அணங்கா? (வருத்தும் அரமகளிரா) மாதரா, மயிலா எனத் தடுமாற்றம் தருவது ஏன்?
2. நோக்கே தானையாகிப் படையாகிப் பாயக் காண்க. (முதல் இரு குறட்பாக்களில் படையின் தாக்கம் வரக் காண்க)
3. இன்று பெண்வடிவம் கூற்றம் (உயிரினைக் கூறுபடுத்துவது) ஆக உண்டென்பதை உணர்ந்தேன்.
4. கண்டவர் உயிர் உண்ணும் கண்கள் பெண்களின் கண்கள்.
5. மாதர் நோக்கம் கூற்றம், காதல்கண், மருள்மிக்க மான்விழியா?
6. காமப் படை நடத்தும் வில்லாகிய புருவம், கண் மறைப்பின் நடுங்கும் துன்பம் இல்லாகும்.
7. போர்முகத்துப் பகைப்படை தாங்கும் யானையின் முகபடாம் பெண்களின் மார்பகத்து ஆடை.
8. போர்க்களத்தில் பகைவர் அஞ்சும் என்பீடு நடை களவுப் பெண்ணின் நெற்றிக்கு உடைந்தது (நெற்றி காம அம்பு தீட்டும் இடம்)
9. பெண்களின் மான் பார்வை – நாணம் போதும் துன்பம் தர, தீட்டும் இடம்)
10. உண்ட பின்னரே மது மயக்கும்; பெண் காமம் கண்டபோதே போதை மிகுக்கும்.

இங்கும் காமப் புலன்வழிச் செல்லும் மனமும் புலன்களும் நடத்தும் போர் படையெனப்படுவது காண்க.

மூன்று குறட்பாக்களும் உள்பொருள் கொண்டு உண்மைகாண நம்மை ஆற்றுப்படுத்தக் காண்க. அறத்துப்பாலின் முதற்குறள் அகரம் போன்று ஆதிபகவன் முதல் அதுவே பகுத்துப் பல்லுயிர் தோறும் பாயும் என்றும்; பொருட்பாலின் முதற்குறள் படையும் படையால் காக்கும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் அரசின் முதல் என்றும்; அதுவே முரண்படின் - அறம் திறம்பின் போர்க்களம் என்றும்; காமத்துப் பாலின் முதற்குறள் தாக்கவந்த சூரர மகளா? என்று எடுத்தவுடன் மனப்போராட்டம் காட்டும் தன்மையும் காண்க.

ஆதிபகவன் பகுத்துப் பகுத்துத் தந்த உலகு உயிர்வாழ இடம் தந்தது. இன்ப நாட்டம் இடர் தந்தது. தூய மெய்யறிவு நாட்டம் பேரின்பம் தந்தது. வாழ்வியல் போர் நிறைவுபெற உயிர் மூலத்துடன் கலந்து கரைந்து போக வேண்டும் (தான் தனது என்னும் செருக்கு அறுக்க வேண்டும்) பொருட்பால் எடுத்ததும் உலகப் போர் பொருள் காரணம் பற்றியதால் படையும் குடியும் கூழும் சிறக்க அமைச்சு நட்பு அரண் வேண்டும் என்று கூறிடக் காண்க. உயிர் உலகுக்கு வந்தது; உடல் எடுத்தது, புலன்வழிப் போர் தொடங்கியது. அதுவே காமத்துப் பாலின் கருத்தாம். எனவே உயிர்கள் அறம் தெரிந்து காமம் கடந்து பொருள் ஆதிக்கம் விடுத்து வேண்டாமை அன்ன விழுச்செல்வம் வேறில்லை என மெய்யுணர்ந்து; இருவினை துறந்து அறத்தின் ஆளுமை வழிநின்று பிறவிப்பிணி தீர்க்க வேண்டும். எங்கும் போர் எதிலும் போராட்டம். உணர்வின் போர்; உடலின் போர்; உயிரின் போர் என்று முக்குறளும் முழங்கக் காண்க.

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவதன்று உலகத் தியற்கை"

என்ற சங்கப்பாடல் அடிகள் உலகம் உள்ளவரை; அறவியல் உலகம் உருவாகும் வரை; கயமை கோ மேலோச்சும் வரை; காமம் குடைபிடிக்கும் வரை உண்மையாம்.

கடவுள் வாழ்த்து	-	உயிரின் நலக்காப்பு, உயிர்கள் அடையும் பேறு.
இறை மாட்சி	-	உடலின் பொருளின் வளர்காப்பு உடல் வளரத் துணையாவன.
காம நிறைவு	-	உணர்வுக்குரிய காப்பு (புலக்காப்பு) ஐம்புலன் ஆர அறிவு நெறி வளர்த்தல்.

எனவே உடல்வாழ உயிர்வாழ வேண்டும். உயிர்வாழ்வு நிறைவுபெற உயிரின் மூலத்தை - முதலை - அறிய வேண்டும். அதனோடு கலத்தல் வேண்டும். அது நீடுவாழ்தலாம். இது திருக்குறள் மெய்யியல் அடித்தளம் (ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணியதுடைத்து? என்ற குறளை இங்கு ஒப்பு நோக்குக)

காமம் கழிய - கட்டுப்பட - மனம் நிலைநிற்கும்
மனம் நிலைநிற்க உயிர் உயரும், செம்மைபெறும்.
இறைமை சிறக்க நாடு நலம் பெறும், அறம் ஆளும்.
கடவுட் காட்சி அகத்துள் காண மனிதம் தெய்வமாகும்.

என்று கூறும் நுட்பம் காண்க. அகத்துணர்வின் செம்மையே புறத்துணர்வின் செம்மை என்னும் உளவியல், மானுடவியல் உண்மையையும் நினைக்க. உலக மெய்யியலார் சிலர் பரத்தையும் உயிர்களையும் பற்றியே பேசுவர். சித்தாந்திகள் மட்டுமே முப்பொருள் பற்றிச் சிந்திப்பர். சிவம், உயிர், தளை இம்மூன்றினையும் குறளாசான் தொட்டுச் செல்வதை, இம்மூன்று குறட்பாக்களும் உணர்த்தக் காண்க. இவை, தமிழ் அறிவர்தம் கொடை என்பதையும் அறிக. எனவே திருக்குறளின் மெய்யியலின் மாளிகைக்குரிய முகப்பாக இம்மூன்று குறட்பாக்களும் இலங்கக் காண்க.

பரம்பொருளாம் - செம்மைச் சிவத்தின் ஆட்சி அறத்துப்பால்; (அறத்தான் வருவது நிலைத்த இன்பம்) உயிர்க்கூட்டத்தின் - மாந்தவியலின் மாட்சி பொருட்பால்; (தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி வெற்றி தரும் - ஊழையும் வெல்லலாம்) உள்ளத்துள் உறையும் உயிர் நிறைவுபெறும் களம் காமத்துப்பால். காமம் கழிய காதல் நிலை வளரும் (தான் தனது அற்றதியாக நிலைகாதல்) இன்ப அன்பு பெற உயிர் உடலினை உணர வேண்டும். உலகின் கயமை காணவேண்டும். கண்டு வேண்டாமையே விழுச்செல்வம் என்னும் செம்பொருள் காண வேண்டும். என்பதனைத் திருக்குறள்;

காமத்துப்பால்	-	உள்ள மயக்கப் போர்
பொருட்பால்	-	அறிவு மயக்க உலகப் போர்
அறத்துப்பால்	-	உயிர் உயர்த்தும் அறப்போர்.

என்னும் முப்பாலின் பேரியக்கத்தில் உட்பொருளாகக் குறட்பாக்கள் மூன்றும் விளங்கக் காண்க.

முடிவுரை :

இன்றும் காமம் பொறப்பொறுக்கவியலா மாந்தவினம் குடித்தும், ஆடிப்பாடியும், அழிவது காண்க. திரையாட்சி நடத்தக் காண்க. பொருட்பால் மாந்தவள ஆற்றலுக்கு வழிகாட்டாமல் கயமையின் வழிப்படக் காண்க. அறம் ஆளாமல் மறம் ஆள அல்லல்படும் உலகு காண்க. மேலை உலகம் கீழையுலகம் யாவையும் பொருள்வழிப்பட்டு அழிவழி காட்டக் காண்க. எனவே உலகினை மண்புக்கு மாயாமல் காக்கும் அறவழியுலகினைப் படைக்கக் குறள் வழிகாட்டக் காண்க. இன்றைய தமிழர் வலிமையற்றவர்களானதால் குறள் அறம் உலக வெற்றி காணாமல் நிற்கின்றது. தமிழினம் வென்றால் - திருக்குறள் வெல்லும் - திருக்குறள் மெய்யியல் வெல்லும். அத்தகைய உலகத்தைப் படைக்கத் தமிழ் அறிவர்வழி நாம் நடப்போம்.

இளசை சுந்தரம் அவர்களுக்கு ஜெர்மனியில் விருது

"சமய உரைச்சக்கரவர்த்தி" விருது இளசை சுந்தரம் அவர்களுக்கு ஜெர்மனி நாட்டில் வழங்கப்பட்டது.

ஜெர்மனி நாட்டில் ஹம் என்ற நகரத்தில் அருள்மிகு காமாட்சி அம்பாள் ஆலயம் உள்ளது. அங்கு ஒவ்வோர் ஆண்டும் வருடமும் ஜூன் மாதம் திருவிழா நடக்கும். இந்த ஆண்டும் ஜூன் 5-ஆம் தேதி கொடியேற்றம் தொடங்கி பத்து நாட்கள் திருவிழா நடைபெற்றது. நிறைவு நாளன்று தேரோட்டம் நடைபெற்றது. ஐரோப்பாவில் உள்ள தமிழர்கள் இருபதாயிரம் பேருக்கு மேல் திரண்டார்கள். பத்து நாட்களும் இரவு ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெற்றது. இதற்காகத் தமிழகத்திலிருந்து ஆன்மீக அறிஞர் இளசை சுந்தரம் அழைக்கப்பட்டிருந்தார். சிறப்பாக சொற்பொழிவாற்றிய அவருக்கு ஆலய ஆதீனகர்த்தர் திரு. பாஸ்கர குருக்கள் "சமய உரைச் சக்கரவர்த்தி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

ஐரோப்பாவின் பிற பகுதிகளில் உள்ள ஆலயங்களில் சொற்பொழிவாற்றிய பின் இளசை சுந்தரம் தாயகம் திரும்பினார்.

எழுகூற்றிருக்கை

(மூத்த தமிழறிஞர். பெரும்புலவர். **ப. அரங்கசாமி**)

(ஒன்று முதல் ஏழு எண்கள் ஏறுவரிசையில் அமைதல்)

ஒருமூதூர் திருவையா றதனில் உள்ள
　　உயரரசர் கல்லூரி தன்னில் நன்றே
இருமொழிகள் கற்பிக்கும் முறையைக் காண்போம்
　　ஏற்றமுற மூன்றுதமிழ் வகையி னோடு
அருந்தமிழில் பாவகைகள் நான்கும் மற்றும்
　　ஐந்தான இலக்கணமும் ஆறாய்க் கூறும்
பெருந்தொகையும் பண்ணிசைகள் ஏழும் இங்கே
　　பெருமைகொளக் கற்பிக்கும் திறனைக் காண்போம்.

(ஒன்று முதல் ஏழு எண்கள் இறங்குவரிசையில் அமைதல்)

ஏழூர்நல் விழாக்காணும் திருவை யாற்றில்
　　இருப்போர் ஆறுபெரும் சமயம் சொல்வர்
ஆழ்புலன்கள் ஐந்தினையும் அடக்க வல்லார்
　　அருளாளர் நால்வர்திரு முறைகள் நன்றே
காழ்கொள்ள உளமனதில் பதியக் கற்பர்
　　கருதறிய மூன்றுபொருள் உண்மை ஓர்வர்
ஊழ்வினைகள் இரண்டினையும் ஒதுக்க மாட்டார்
　　ஒருலகாய் அண்டத்தைக் காண்போர் தாமே

மூன்று பொருள் – பதி, பசு, பாசம். ஓர்வர் – உணர்வர்.

குறிப்பு : எழு கூற்றிருக்கை என்பது 1 முதல் 7 எண்கள் வரை ஏறுமுக வரியையிலும், 7 முதல் 1 வரை இறங்கு முறை வரிசையிலும் எண்கள், பொருள் குறிப்பதாக அமைத்துப் பாடுவது.

பாட்டில் உள்ள எண்கள் குறிக்கும் பொருள்

1. அரசர் கல்லூரி என்பது தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னரால் அமைக்கப்பட்ட கல்லூரி. இக்கல்லூரியில் தொடக்கத்தில் சமஸ்கிருத மொழியில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

பின்னர் தமிழில் தமிழ்ப் புலவர் பட்டம் பெறும் வகையில் கற்பிக்கப்பட்டு வருகிறது.

இருமொழி	-	தமிழும் சமஸ்கிருதமும்
மூன்றுதமிழ் வகை	-	இயல், இசை, நாடகம்
நான்கு பாவகை	-	வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
ஐந்து இலக்கணம்	-	எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
ஆறு தொகை	-	வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை.
ஏழு பண்ணிசைகள்	-	குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளரி, விளரி, தாரம்.

2. ஏழூர் = ஏழு ஊர் : திருவையாற்றைச் சூழ்ந்த ஏழு ஊர்களிலிருந்து, அவ்வவ்வூர் இறைவனை ஏந்திய பல்லக்குகள் திருவையாற்றில் ஒன்று கூடும் விழா ஏழூர்விழாவாகும் (சப்தஸ்தானம்)

ஏழு ஊர்கள் = திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம்.

ஆறுசமயம் :

காணாபத்தியம் (கணபதியை வழிபடுதல்); கௌமாரம் (குமரனை வழிபடுதல்) ; சாக்தம் (சக்தியை வழிபடுதல்) ; சௌரம் (சூரியனை வழிபடுதல்) சைவம் (சிவனை வழிபடுதல்) ; வைணவம் (திருமாலை வழிபடுதல்)

ஐம்புலன் (ஐந்து புலன்கள்) :

கண், காது, வாய், மூக்கு, மெய், என்று ஐந்து பொறிகளால் நுகரப்படும் காணுதல், கேட்டல், உண்ணல், உயிர்த்தல் (மூச்சு விடுதல்), உற்றறிதல் (தொடு உணர்ச்சி) எனும் ஐந்து புலன்கள்.

நால்வர் (நான்கு திருமுறை) :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் பாடிய தேவாரம், திருவாசகப் பாடல்கள்.

மூன்று பொருள் : பதி, பசு, பாசம் (இறைவன், உயிர் (ஆன்மா) பற்று)

இரு ஊழ் : ஆகூழ், போகூழ். (இருவினையெனின் நல்வினை, தீவினை)

ஓர் உலகம் :

பாட்டின் கருத்து :

இந்த உலகை ஒரே உலகமாகக் காணும் சான்றோர் ஏழூர் விழா நடக்கும் திருவையாற்றில் ஆறு சமயங்கள் காண்பர்; ஐந்து புலன்களை அடக்குவர்; நால்வர் பாடிய நான்கு திருமுறைகளை மனத்தில் பதிப்பர்; பதி பசு பாசம் என்ற பொருளை உணர்வர். ஆகூழ், போகூழ் (நல்வினை, தீவினை) இரண்டையும் அறிவர்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அருட்டிரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம் உரை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். **க. கதிரேசன்**)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

நற்றமிழ் பாடுநக் கீரன் ஞான வெளிஅனு பூதி
சொற்றவன் ஏத்துஅரு ளோனே தோகை மயில்பரி யானே
இற்றை எனக்குஅரு ளோனே எங்கள் சிவபெரு மானே
குற்றமில் லாமறைக் கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை :

எங்கள் ....தேவே; நற்றமிழ்.... எனக்கு அருளோனே; எனக்கும் அருள்க என்று வருவித்துக்கூட்டி முடிக்க.

குறிப்புரை

நற்றமிழ் = திருமுருகாற்றுப்படை. ஞானவெளி = தடையேது மில்லாத ஞானமாகிய பெருவெளி. அனுபூதி = தான் கண்டறிந்ததும்; பிறர்க்கு எடுத்துச் சொல்ல இயலாததுமாகிய பெருநிலை - அனுபவநிலை. சொற்றவன் = சொன்ன அருணகிரிநாதர். தோகைமயில் = ஆண்மயில். பரி = குதிரை. இற்றை = இப்போதே. எங்கள் முருகனடியார்களாகிய எங்கள்.

பொழிப்புரை

முருகனடியார்களாகிய எங்கட்கு வாய்த்த சிவபெருமானே; குற்றமில்லா மறைகள் போற்றும் கோவே; குன்றக்குடியுறை தேவே; நற்றமிழாகிய திருமுருகாற்றுப்படை அருளிய நக்கீரரும், தடையேது மில்லாத ஞானப்பெருவெளி அனுபவத்தை உலகவர் உய்யச் சொல்லியுள்ள கந்தரனுபூதி அருளிய அருணகிரிநாதரும் போற்றுகின்ற அருள்வடிவானவனே. இப்பொழுதே எனக்கு அருள்புரிய உள்ளவனே. இப்பொழுதே எனக்கும் அருள்புரிந்தருள்க.

விளக்கம்

சிவபெருமான் வேறு, அருள்தரு சண்முகநாதப் பெருமான் வேறல்லன். அவனே இவன், இவனே அவன் என்பதை

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதுஓர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம் உய்ய"

– கந்தபுரா. திருவவதா..92

அருவரும் ... பிழம்பு = சோதி வடிவான பிரமம்.

"ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால்"

– கந்தபுரா – திருவிளையா...19 : 1.2

என்பனவற்றால் குன்றக்குடியானை எங்கள் சிவபெருமான் என்றார்.

பாடிய நக்கீரரை மட்டுமன்றி, உடனிருந்துகேட்ட அனைவரையும் பூதத்தின் சிறையிலிருந்து விடுவித்தது திருமுருகாற்றுப் படையாதலின் அது "நற்றமிழ்" என்று சுட்டப்பெற்றது.

பெருமான் ஊர்தியாகிய மயிலைப் பரி என்று கூறும் வழக்கினை,

"ஆடும்பரிவேல் அணிசேவல் என" – என்ற கந்தரனுபூதி, "மயிலேறு ராவுத்தனே" என்ற தொடர்களால் அறிக.

தன்னை வழிபடுகின்றவர் இடர்களைந்து பேரின்பக் கரை ஏற்றுகின்றவன் குன்றக்குடியான் என்பதால் "இற்றை எனக்கு அருளோனே" என்றார்.

என் நிலையுயர்த்தி என்னில் எழுந்தருள்க என்று வேண்டும் அடிகள், முன்னைய 9–ஆம் பாடலில் "குக்குடகேதனமும்" இப்பாட்லில் "மயிற்பரியும்" கூறினார்கள்.

இலக்கணக்குறிப்பு

நற்றமிழ் – பண்புத்தொகைப்புறத்துப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பாடு நக்கீரன் – வினைத்தொகை. சொற்றவன் – எதுகை நோக்கிய செய்யுள் விகாரம். இது அருணகிரியாரைக் குறித்தலால் வினையாலனையும் பெயரால் நின்றது. ஏத்து அருளோனே – வினைத்தொகை. மயில்பரி – உருவகம். சிவபெருமான் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

திருச்சிற்றம்பலம்.

உருவத்தால் உயர்வா?

(கவிவேந்தர் **கா. வேழவேந்தன்**)

உருவத்தால் லால்பகதூர் குள்ளம்; ஓர்நாள்
ஒரு நண்பர் அவரிடத்தில் கிண்ட லாக,
"இருக்கின்ற எங்களிடம் பேசும் போதில்
எட்டியெட்டித் தலைநிமிர்த்திப் பேசு தற்கே
இருக்காதா ஒருவெட்கம்?" என்றார்! கேட்ட
ஏந்தலவர் லால்பகதூர் பதில்கொடுத்தார்;
"நெருங்கிவந்து பேசுபவர் அன்றோ தாழ்ந்து
நெளிந்துதலை குனிகின்றார்; எனக்கேன் வெட்கம்?"

புரட்சியினால் ருஷ்யாவைத் திருப்பிப் போட்ட
புதுச்சிற்பி லெனின் உயரம் குறைவே; அன்று
மரநாற்கா லியில் அமர்ந்த அவரின் கால்கள்
மண்தரையைத் தொடாததனைக் கேலி செய்தே
ஒருதோழர் சிரித்திட்டார்; லெனினும் சொன்னார்;
"உள்ளங்கால் பூமியினைத் தொடவே வேண்டாம்;
இருக்கின்ற மூளைவளத் திறத்தால், என்றன்
எண்ணங்கள் விண்முகட்டைத் தொட்டால் போதும்!"

"உருவுகண்டே எள்ளாமை வேண்டும்" என்றே
உரத்தகுரல் எழுப்புகின்றார் குறளார்! காவில்
சிரிக்கின்ற மகிழம்பூ சிறிதே; ஆனால்
தெவிட்டாத நறுமணத்தால் நெஞ்சை அள்ளும்!
கரியநிறக் குயில்உருவால் சிறிதே; ஆனால்
கற்கண்டுக் கானத்தால் ஓங்கி நிற்கும்!
உருவத்தால் மனிதர்களை அளந்தி டாமல்
உள்ளத்தால் உயர்பண்பால் அளப்போம், வாரீர்!

செவ்வியல் மொழிக்கான தகுதிகள்

(டாக்டர். வா.செ. குழந்தைசாமி)

தமிழ் மொழியின் செவ்வியல் தகுதியை மத்திய அரசு அங்கீகரித்து 12-10-2004இல் ஆணை பிறப்பித்த நாள் முதல் செவ்வியல் மொழியின் தகுதிகள் பற்றிய விமர்சனங்கள், குறிப்பாக அதன் பழமை பற்றிய விவாதங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அண்மையில் தமிழகத்தின் சட்டமன்றத்தில்கூட இப்பிரச்சினை இடம்பெற்றது. எனவே, இத்தலைப்புத் தொடர்பாகச் சில அடிப்படைக் கருத்துகளை முன் வைப்பது பயன் தரும் என்று நம்புகிறேன்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) உருவாக்கிய முப்பது அம்சத் திட்டத்தில், தமிழ் மொழியின் செவ்வியல் தன்மையின் அங்கீகாரமும் ஒன்று. அதில் மேல் நடவடிக்கை எடுக்கும் வகையில் இப்பிரச்சனை பற்றி ஆய்ந்து அறிக்கை தர மத்திய அரசின் உள்நாட்டு அமைச்சகம் ஒரு வல்லுநர் குழுவை அமைத்தது. சாகித்ய அகாதெமியின் தலைவரின் தலைமையில் அக்குழு 2.9.2004 அன்று கூடியது.

மத்திய வல்லுநர் குழு பதிவு செய்திருப்பது என்ன?

மத்திய அரசின் வல்லுநர் குழு முதலில் சந்தித்த கேள்வி, செவ்வியல் மொழிக்கான தகுதிகள் யாவை என்பதுதான். அக்குழு தனது விவாதத்தில் பதிவு செய்திருக்கும் தகவல்கள் பின்வருமாறு.

1. உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட செவ்வியல் மொழிகள் பட்டியல் என எதுவும் இல்லை.
2. செவ்வியல் மொழிக்கான தகுதிகள் எவை என்பதும் எங்கும் வரையறுக்கப்படவில்லை.

எனவே முதலில் தகுதிகள் நிர்ணயிக்கப்படவேண்டும்.

இந்தச் சமயத்தில் தமிழகத்தில் பலர் ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) அங்கீகரிக்கப்பட்ட பட்டியலும், நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் இருப்பதாகவும்,

அதில் 2000 ஆண்டு பழைமை தேவை எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் எழுதியும், பேசியும் வருகின்றனர்.

இது தொடர்பாக அந்த நிறுவனத்தின் உச்சநிலை அங்கமான ஆட்சிக்குழுவின், தற்போதைய செயலராக இருப்பவரும் மோரிஷஸ் நாட்டின் முன்னாள் கல்வி அமைச்சருமான ஆறுமுகம் பரசுராமனுக்கு, விளக்கம் வேண்டி ஒரு கடிதம் எழுதினேன். அவரிடமிருந்து கிடைத்த அதிகாரபூர்வமான தகவல்கள் பின்வருமாறு :

1. UNESCO நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட செவ்வியல் மொழிகள் பட்டியல் என எதுவுமில்லை.
2. UNESCO நிறுவனம் செவ்வியல் மொழிக்கான தகுதிகள் என எதையும் நிர்ணயம் செய்யவில்லை.
3. அவர் அறிந்த அளவில் இந்தப் பிரச்சினை UNESCO நிறுவனத்தின் அதிகாரத்திற்கும், கடமை வரம்புகளுக்கும் புறம்பானது. எனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக UNESCO நிறுவனத்தை மேற்கோள் காட்டுவது முழுவதும் தவறான செயலாகும். திசை திருப்பும் செயலுமாகும். மீண்டும் வல்லுநர் குழுவுக்கு வருவோம்.

வல்லுநர் குழுவினர் செவ்வியல் மொழியின் தகுதிகள் எவை என்பது இதுவரை அதிகாரபூர்வமாக எந்த ஒரு நிறுவனத்தாலும் நிர்ணயிக்கப் படாததால், கிரேக்கம், லத்தீன், வடமொழி போன்ற மொழிகளைச் செவ்வியல் மொழிகள் என அங்கீகரிப்பதில் உலக அளவில் அறிஞர் மத்தியில் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை மனதில் கொண்டு கீழே காணப்படும் தகுதிகளை நாங்கள் நிர்ணயிக்கிறோம் என்று கூறி பின்வரும் தகுதிகளை அக்குழு பதிவு செய்திருக்கிறது.

நான்கு தகுதிகள் யாவை?

1. மிகப் பழமையான நூல்களை அதாவது 1500 முதல் 2000 ஆண்டுகள் பழமையான நூல்கள் / பதிவு பெற்ற வரலாறு.
2. அம்மொழியைப் பயன்படுத்தும் பல தலைமுறையினர் அரிய பண்பாட்டுப் பாரம்பரியம் உடையதாகக் கருதும் இலக்கியம் / நூல்கள்.
3. அம்மொழிக்கே உரியதாகவும், மற்ற மொழிக் குடும்பத் தினரிடமிருந்து கடன் பெறாததுமான, இலக்கியப் பாரம்பரியம்.

4. செவ்வியல் மொழி என்பதும் அதன் இலக்கியமும் அம்மொழியின் நவீன இலக்கியத்திலிருந்து வேறுபட்டு இருக்கும். ஆதலால், ஒரு செவ்வியல் மொழிக்கும் அதன் நவீன வடிவத்திற்கும் அல்லது அதிலிருந்து பிறந்த மொழிகளுக்கும் இடையே ஒரு தொடர்பின்மை இருக்கக்கூடும்.

இந்த நான்கு விதிகளும் செவ்வியல் மொழி எனும் தகுதிக்கான பொது விதிகள். எந்த மொழிக்காகவும் உருவாக்கப்பட்டவை அல்ல. இந்த விதிகளைத் தமிழ் நிறைவு செய்கிறதா என்பதைப் பொருத்துத்தான், தமிழின் தகுதி பற்றிய பரிந்துரை அமைய முடியும்.

தமிழ் இவற்றை நிறைவு செய்கிறது என முடிவு செய்த குழு கீழ்க்காணும் பரிந்துரையை மத்திய அரசுக்கு அளித்தது.

"மத்திய அரசு செவ்வியல் மொழிகள் பற்றி ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டும். அந்த ஆணையில் ஒரு மொழி செவ்வியல் தகுதி பெற, இந்தக் குழு பரிந்துரை செய்திருக்கும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடப்படவேண்டும்.

இறுதியாக இந்திய மொழிகளில் இந்தத் தகுதிகளை நிறைவு செய்யும் மொழிகளான வடமொழியும், தமிழும் செவ்வியல் மொழிகள் என அறிவிக்கப்பட வேண்டும்" எனவே, குழுவினரால் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் பொதுவாகச் செவ்வியல் மொழிகளுக்கான தகுதிகளேயன்றிக் குறிப்பிட்டு எந்த ஒரு மொழிக்காகவும் கூறப்பட்ட தகுதிகள் அல்ல.

செவ்வியல் மொழி என்பதற்கு அடிப்படை அந்த மொழியில் உள்ள இலக்கியங்கள் தாம்.

அந்த இலக்கியங்கள் பழைமையையும் கிரேக்கம், லத்தீன் மொழிகளில் உள்ள செவ்வியல் இலக்கியங்களை ஒத்த லட்சியம், கண்ணியம், பொதுமை, பகுத்தறிவு, ஒழுங்கு போன்ற பண்புகளும் கொண்டவையாக இருக்க வேண்டும். இந்தத் தகுதிகளில் பழைமை என்று வரும்பொழுது அதற்கான ஆண்டுகள் நிர்ணயிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

பழமையான இலக்கியம் என்பதற்கு எத்தனை ஆண்டுகள்?

எனவே பழமையான இலக்கியம் என்பதற்கு எத்தனை ஆண்டுகள் இருக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. பழமையான மொழி என்பதற்கு உலக அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்கணம் இருக்கிறது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியிடப்பட்ட உலகின் பழமையான மொழிகள் கலைக்களஞ்சியம் (Encyclopaedia of World's Ancient Language) என்ற நூல் பழமையான மொழி என்பதற்கான அடிப்படைகள் பற்றி அறிஞர் கருத்துகளை ஆய்ந்து, கி.பி. 500-க்கு முற்பட்ட மொழிகளைப் பழமையான மொழிகளாகக் கருதலாம் என்று வரையறுத்திருக்கிறது. அதன் அடிப்படையில் 45 மொழிகளைப் பட்டியலிட்டிருக்கிறது.

இந்தியாவைப் பொருத்தவரை வடமொழி, தமிழ், பாலி, பிராக்கிருதம் ஆகிய மொழிகள் இடம்பெற்றிருக்கின்றன. செவ்வியல் மொழி என்ற தகுதியைப் பெறுவதற்கு மொழியில் பழமை மட்டும் போதாது. செவ்வியல் இலக்கியம் என்று கூறும் தகுதியுள்ள, 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையுடைய இலக்கியமும் வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது பழமையான இந்திய மொழிகள் நான்கில் வடமொழியும், தமிழும் மட்டும் செவ்வியல் மொழிகள் என்ற தகுதியைப் பெறுகின்றன.

மேலே கூறிய விளக்கத்திலிருந்து 1500 முதல் 2000 ஆண்டுகள் பழமை என்பது பொதுவாகச் செவ்வியல் தன்மை எனும் தகுதிக்கு வகுக்கப்பட்ட தகுதியே தவிர, தமிழின் பழமை பற்றிய பிரச்சினை அங்கு எழுவதில்லை. செவ்வியல் தன்மைக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதியை விட, மிக அதிகமான பழமை உடையது தமிழ் என்பது தான் நிலை.

தமிழின் பழமை குறைக்கப்பட்டுள்ளதா?

ஒரு தேர்வில் வெற்றி பெறுவதற்கு குறைந்தபட்ச மதிப்பெண் 50 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், 90 மதிப்பெண்கள்

பெற்றுத் தேறும் மாணவன் போன்ற நிலையில் வடமொழியும் தமிழும் இருக்கின்றன என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. தமிழின் பழைமையைக் குறைத்துவிட்டதாக எழுதுவதும், பேசுவதும், பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாததும், தவறான கருத்துகளைப் பரப்புவோரின் எழுத்தையும், பேச்சையும் நம்புவதும் அல்லது தமிழுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த வரலாற்றுப் பெருமைமிக்க தகுதியைக் குறைத்து மதிப்பிட வேண்டுமென்ற குறுகிய மன நிலையும் தான் காரணமாக இருக்கமுடியும்.

வல்லுநர் குழுவின் பரிந்துரையை மத்திய அரசின் அமைச்சர்கள் கூட்டத்தின் (Cabinet Meeting) ஒப்புதலுக்கு வைத்த பண்பாட்டு அமைச்சகம் 1500-2000 என்றிருந்த பரிந்துரையை 1000-க்கு மேலான பழைமை என நாணயக் குறைவான முறையில், சில காரணங்களைக் கூறி மாற்றி இருந்தது. இந்த மாற்றத்தின் உள் நோக்கத்தை ஆழமாக ஆராயாது முதலில் மத்திய அரசின் அமைச்சர் குழு (Cabinet) ஏற்றுக் கொண்டுவிட்டது.

தமிழக முதலமைச்சரின் எதிர்ப்பு

இந்தக் கால நிர்ணயத்தைத் தமிழக முதல்வரும், மொழிகளின் செவ்வியல் தன்மையை நிர்ணயித்திருப்பதாக மத்திய அரசு அமைத்திருந்த வல்லுநர் குழுவும் கடுமையாக எதிர்த்ததன் காரணமாக, 1000 ஆண்டுகளுக்கு மேலாக என்பது திருத்தப்பட்டு, மீண்டும் உயர்மட்டக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப 1500 முதல் 2000 என மாற்றப்பட்டது. மத்திய அரசு அமைத்த வல்லுநர் குழு செவ்வியல் மொழிகளுக்கு, உலக அளவில் பொது விதிகளாக உருவாக்கியதில் இலக்கியங்களுக்குக் குறிப்பிட்டிருக்கும் குறைந்தபட்சப் பழைமை, எந்த மொழியின் பழைமையையும் கி.பி. 500க்கு முற்பட்ட மொழிகள் என வரையறுத்திருக்கும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கலைக்களஞ்சியத்தில் உள்ள 45 மொழிகளில் பல கி.மு. 2500க்கும் முற்பட்டவை என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

– நன்றி : "தினமணி", 1.4.2008

சிந்தனை வட்டம்

அன்புடையீர், வணக்கம்.

யானெழுதிய "கண்ணகியும் காரைக்காலம்மையாரும்" என்ற கட்டுரை பற்றி திரு. ச.மு. விமலானந்தன் என்பார் மக்கள் சிந்தனை வைகாசி இதழில் "இது வீணான – வேண்டாத – கற்பனை" என்றும், "இவ்வாறு கூறுவது தவறு" என்றும், "சேக்கிழார் படைத்த பரமதத்தனைப் படித்துப் பார்த்தால் இது விளங்கும்" என்றும் "விளக்கி" இருந்தார்.

நான் வேறு யாரோ எழுதிய பெரியபுராணத்தைப் படித்துவிட்டு எழுதியுள்ளதாக திரு. விமலானந்தன் எண்ணிக் கொண்டிருக்கிறார் போலும்.

"பரமதத்தன் மீது சேக்கிழாரோ, அவன் மனைவி புனிதவதியோ எக்குறையும் கூறியதாகத் தெரியவில்லை" என்று கூறியுள்ளார். இதன் கருத்து என்ன?

சேக்கிழாரும் சொல்லாத – புனிதவதியாரும் புகலாத அகச்சான்றே இல்லாத ஒன்றை, வீணான – வேண்டாத – கற்பனையை நீ ஏன் ஏற்றுகின்றாய் என்பதுதான். ஆக, அகச்சான்று இல்லாத ஒன்றைச் சந்தருப்ப சூழ்நிலைகளைக் காரணம் காட்டி அதன்மீது ஏற்றுதல் கூடாது என்பதில் திரு. விமலானந்தன் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்று தெரிகின்றது. அவர் நம்பிக்கை வாழ்க.

பரமதத்தன் இரண்டாவது மாம்பழத்தை எடுத்துவா என்றவுடன் புனிதவதியார் ஏன் உண்மையைக் கூறாது மறைத்தார்? இறைவனை வேண்டிப் பழம் பெறுவது ஏன்? என்று வினா எழுப்பி இருந்தேன். இதற்கான விடையாகத் திரு. விமலானந்தன்

"பரமதத்தன் இரண்டாவது முறையும், மூன்றாவது முறையும் மாம்பழம் கேட்டது – கேட்க வைத்தது சிவன் செயல்" என்று கூறியுள்ளார். புனிதவதியார் உண்மை கூறாதது பற்றி விமலானந்தன் ஒன்றும் கூறவில்லை என்றாலும் அதுவும் சிவன் செயலே என்று நாம் எடுத்துக்கொள்வோம்.

சிவன் திருவுள்ளப்படிதான் பரமதத்தன் இரண்டாவது மாம்பழத்தைக் கேட்டான். புனிதவதியார் உண்மை கூறாது மறைத்தார்; மூன்றாவது மாம்பழத்தைக் கேட்டார் என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார் விமலானந்தர்.

அதுசரி, இவை எல்லாம் "சிவன் செயல்" காரணமாகத்தான் நடந்தன என்று சேக்கிழார் சொல்லியுள்ளாரா? புனிதவதியார் புகன்றுள்ளாரா? சேக்கிழாரின் பெரியபுராணத்தில் எந்தப் பாடலில் இதற்கு ஆதாரம் இருக்கின்றது?

"சூழ்நிலையைப் பயன்படுத்தி உன் கருத்தைத் திணிக்காததே" அது வீணான – வேண்டாத – கற்பனை என்றீர்களே. சிவன் செயல் என்று இப்பொழுது நீங்கள் விட்ட கரடி எந்த வகையைச் சார்ந்தது? ஊருக்குத்தான் உபதேசமா? உங்கட்கும் பொருந்தாதா?

சேக்கிழாரின் படைப்பு நுட்பம் பற்றியும், அதன் வெளிப்பாட்டுக் கலை நேர்த்தி பற்றியும் பேசுவதுதான் என் கட்டுரையின் நோக்கம். நம்பிக்கைகள் பற்றிக் கதையளப்பது என் நோக்கமில்லை.

அறிவை அறிவினால்தான் அளக்க முடியும்; நம்பிக்கைகளால் அளக்க முடியாது. ஏனெனில் அறிவும் நம்பிக்கையும் எதிரெதிரான இயல்புகளைக் கொ ண்டவை. படைப்பு நுட்பமும் கலைநேர்த்தியும் அறிவுசார்ந்தனவேயன்றி நம்பிக்கை சார்ந்தன அல்ல.

– பாவலர்மணி. **ஆ. பழநி**

கடந்த 2, 3 இதழ்களாக தொடர்ந்து வரும் காரைக்கால் அம்மையார் பற்றிப் படித்து அறிந்து கொண்டேன். எப்பொழுதோ மேல்நிலைப் பள்ளியில் படிக்கும்பொழுது, இந்தக் கதைகளை துணைப்பாடமாக படித்தது. அகநானூறு, புறநானூறு என்று ஏதோ அர்த்தம் புரிந்தும் புரியாமலும் படித்தது. பெரியபுராணம் என்பது குறித்து விவரமாக ஒன்றுமே தெரியாமலே படிக்கவேண்டும். தேர்வில் மதிப்பெண்கள் பெறவேண்டும் என்று படித்தது.

இதையெல்லாம் படிக்கும்பொழுது இப்பொழுது என்ன தோன்றுகிறது என்றால் வாழ்க்கையில் எவ்வளவோ தவறவிட்டோம் என்றும் தோன்றுகிறது. கற்றது கைமண்ணளவுகூட இல்லை ஒரு தூசிதான் என்றும் இப்பொழுது கூட ஒன்றும் மோசம் போகவில்லை. இன்றும் கூட படிக்கலாம்.

– **லலிதாமணி,** மும்பாய்.

மனித மனங்களை அன்பின் வழியே இணைப்பதன் மூலம் உருவாக்கும் அமைதியே நிலையானது! மகிழ்ச்சியானது என்ற பொன்னம்பல அடிகளாரின் பொன்மொழியைப் போற்றி அன்பு வழியில் அனைவரும் வாழ்வோம்!

தவத்திரு அடிகளார் "பகைமாட்சி" அதிகாரத்தின் உரையில் சிந்தனையைத் தூண்டும் சிறந்த வினாக்களை வினவுகிறார். அவை : (1) "தம்மின் மெலியார் மேல் பகை மேவுக"- அறநெறி வழி ஏற்புடையதன்று. "பகையைப் பராமரித்துக் கொள்க? என்று கூறலாமா?" (2) அறிவிலாது அஞ்சுபவனிடம் பொருது வெற்றிபெறுதல் அறமாகுமா?

"தில்லைவாழ் அந்தணரும், தீட்சிதரும்" என்ற கட்டுரை மூலம் கீழ்வரும் இரண்டு கருத்துகளைத் தெரிந்துகொண்டேன்.

1. திருக்களிற்றுபடியார்" – பெயர்க்காரணம்.


2. இன்று தில்லையிலுள்ள தீட்சிதர்கள் தில்லைவாழ் அந்தணர் அல்லர். கட்டுரையாசிரியருக்குப் பாராட்டுக்கள். இக்கட்டுரையாசிரியருக்குப் பாராட்டுக்கள்.

பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப் பதிக உரையும், பாவடிவில் திகழும் "அருளாலய ஆண்டும்" பிற கட்டுரைகளும் சிறப்பாயுள்ளன. படைப்பாளர்களுக்குப் பாராட்டுக்கள்.

கணவன் இல்லாதபோதும் வரும் சிவனடியாரை வரவேற்று உணவு தந்து உபசரிக்க வேண்டும் என்பதைக் காரைக்காலம்மையார் புராணத்தின் மூலம் அறிகிறோம்.

–புலவர். **ச.மு. விமலானந்தன்**

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்

S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் கல்வி நிலையம்

(மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு)

குன்றக்குடி - 630 206

✆ : **04577 - 264567 Mobile : 94433 64200**

குன்றக்குடி மக்கள் கல்வி நிலையம், கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு கீழ்க்கண்ட தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கிவருகிறது. பயிற்சி நிறைவு பெற்றபின் சான்றிதழ்களும், தொழில் துவங்க ஆலோசனைகளும் வழங்கப்படும். சுய உதவிக் குழுக்கள், கிராமப்புற மக்கள், இளைஞர்கள், பெண்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இயக்குநர்,

மக்கள் கல்வி நிலையம், குன்றக்குடி

பயிற்சிகள் (TRADES)

1. தையல் பயிற்சி 2.கணிப்பொறி பயிற்சி 3. எலக்ட்ரிக்கல் வயரிங் மற்றும் ரிப்பேரிங் 4. மின்அணுக்கருவிகள் பழுதுபார்த்தல் 5.வெல்டிங் பயிற்சி (பற்றவைத்தல்) 6.சீட் மெட்டல் உற்பத்தி 7.பைபர்கிளாஸ் பொருள்கள் உற்பத்தி 8.கட்டிட தொழில்நுட்பம், பொருள்கள் உற்பத்தி 9.இரண்டு நான்கு சக்கர வாகன பராமரிப்பு மற்றும் ரிப்பேரிங் 10.கயிறு மற்றும் பாய் தயாரித்தல் 11. குளிர்சாதனப் பெட்டிகள் ரிப்பேரிங் 12.வார்ப்பு உலோக உற்பத்தி 13.ஹாலோ பிளாக் & மொசைக் கற்கள் தயாரித்தல் 14. சாக்பீஸ், மெழுகுவர்த்தி தயாரித்தல் 15. கம்ப்யூட்டர்சாம்பிராணி, பினாயில் தயாரித்தல் 16. மருத்துவ உதவியாளர் 17.மருத்துவ உபகரணங்கள் பழுதுபார்த்தல் மற்றும் கயாளுதல் 18. திரை அச்சு வேலைகள் 19. வீட்டு உபகரணப் பொருட்கள் பழுதுபார்த்தல் 20.யோகா ஆசிரியர் பயிற்சி 21. ஓவியம் மற்றும் வரைபடம் வரைதல் 22. கைவினைப்பொருட்கள் தயாரித்தல் 23. உணவுப் பொருட்கள் தயாரித்தல் 24. கேஸ் வெல்டிங் 25. தொழில்முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி 26. இயற்கை உயிர் உரம் (மண்புழு) தயாரித்தல் 27. வேளாண் சார்ந்த பயிற்சிகள் 28.தோட்டக்கலை சார்ந்த பயிற்சிகள் 29. கால்நடை சார்ந்த பயிற்சிகள் 30. மின்சாதனப்பொருட்கள் பராமரிப்பு

தகுதி : தன்முனைப்பு, தன் ஆர்வம் மட்டும்.

பயிற்சி நேரம் : பயிற்சி நாள்தோறும் இரண்டு மணி நேரம் மட்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பயிற்சிகளில் சேரலாம்.

குறிப்பு : ஒவ்வொரு பயிற்சிக்கும் பயிற்சி நிறைவு பெற்றபின் தேர்வின் அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உழவாரம்
சைவ சமய எழுச்சி மாநாடு

கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குச் சைவ சமயப் பயிற்சி, நாயன்மார் அவதாரத் தலங்களை மையப்படுத்தி வளர்ச்சித் திட்டங்கள் வகுத்தல், அரிய சைவ நூல்களை வெளியிடல், தொலைக்காட்சி முதலான ஊடகங்களைப் பயன்படுத்தல், சைவ அமைப்புகள் ஆன்றோர்கள் தொண்டர்கள் இணைந்து செயல்படுதல் முதலான செயல் திட்டங்களை முன்வைத்து சென்னையில் உழவாரம் சார்பில்

17.08.2008 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு பி.எஸ். மேல்நிலைப்பள்ளி தட்சிணாமூர்த்தி அரங்கில் (215 இராமகிருஷ்ண மடம் சாலை, மைலாப்பூர் சென்னை – 4)

சைவ சமய எழுச்சி மாநாடு நடைபெற உள்ளது. மாநாட்டில் தவத்திரு பொன்னம்பல அடிகளார், தவத்திரு ஊரன் அடிகள், திரு. பிச்சாண்டி ஆணையர். இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, திரு. ஆ. ஞானம், மேனாள் துணைவேந்தர் திரு. எஸ். முத்துக்குமரன் மேனாள் துணைவேந்தர், திரு. ஏ.எம். சுவாமிநாதன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) திரு. ப. இலட்சுமணன், திரு. ஜி. மாசிலாமணி, அட்வகேட் ஜெனரல், முனைவர் திரு. இரா. செல்வக்கணபதி, டாக்டர் திருமதி. சுதாசேஷையன் ஆகியோர் பங்கு பெறுகின்றனர். அனைவரும் வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வண்ணம்
உழவாரம்

உழவாரம்
கல்லூரி மாணவர் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம்

முதல்நிலை : செயல்முறை : உழவாரம் பரிந்துரைக்கும் பாடத்திட்டத்தின்படி அவரவர் கல்லூரிகளில் தேர்வு எழுதுதல் : தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கும் பூம்புகார் மேலையூரில் பண்பாட்டுப்பயிற்சி முகாம் (5 நாள்) நடத்துதல் ; தங்குமிடம், உணவு, இலவசம், சிறப்பிடம் பெறும் மாணவர்களுக்கு ரூ. 10,000 அளவில் பல்வேறு பரிசுகள் வழங்குதல்; நுழைவுக் கட்டணம் ரூ. 50

முகாம் பாடத்திட்டம் :

தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம், சிவஞான போதம்.

இராண்டாம் நிலை : செயல்முறை :

கல்லூரித் தேர்வு இல்லை நேரடியாகப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளல்; ஐந்து நாள் முகாம்: தங்குமிடம், உணவு தரப்படும், கட்டணம் ரூ. 100.

முகாம் பாடத்திட்டம் :

1. சைவசித்தாந்தத்தை முன்னிறுத்தி இந்தியத்தத்துவம் 2. இந்திய வரலாறும் பண்பாடும் 3. செவ்விலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம். 4. வாழும் முறை 5. மனிதவளமும் மாணவர்களுக்காகத் தயாரித்தலும் 6. பொது அறிவு 7. நுண்கலை.

உங்கள் பகுதியில் இருக்கும் கல்லூரிகளில் இத்திட்டத்தை அறிமுகப் படுத்துங்கள். கல்லூரி முதல்வரோ, பேராசிரியரோ, நிர்வாகக்குழுவினரோ உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் பரிந்துரைத்துச் செயல்படுத்துங்கள்.

தொடர்பு முகவரி : **இரா. இராஜசேகரன்**
செயலர்
சீனிவாசா மேல்நிலைப்பள்ளி,
மேலையூர், பூம்புகார் – 609 107
தொலைபேசி : 04364256118, அலைபேசி : 944[illegible]

KOV... LIBRARY, KOVI...
A. No. 45718

MAKKAL CHINTHANAI - July 2008 Price Rs. 5-00
Date of Publication 20-07-2008
Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரி

குன்றக்குடி - 630 206, சிவகங்கை மாவட்டம்.
NCTE ORDER No.: F.SRO/NCTE/B.Ed./2006/2007/17285/23-01-2008

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக இணைப்பு
ALU/CDC/3-AC/33BEd/2007, Dt.14-2-2008

- அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணம் மட்டுமே
- விடுதி வசதி உண்டு.
- மகளிருக்கு மட்டுமே நடத்தப்படும் கல்வியியல் கல்லூரி.

சேர்க்கைக்கு நேரில் வரவும்.

மேலும் விபரங்களுக்கு
04577-264227, 04565-210393
99522 77350, 94869 52058



பெறுநர்

திரு ஆதீனகர்த்தர் அவர்கள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி (வழி)

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166